சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

HMOP No.36/2023

பெயர். திருமதி. ஐஸ்வர்யா த/பெ. நாள். 14.07.2025

**<u>எதிர்மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1. மனுதாரர் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். எதிருரை நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். முதல் விசாரணை வாக்குமூலமும் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. திருமணத்திற்கு மனுதாரரால் அதிக பொருட்செலவு செய்யப்பட்டது என்றால் மனுதாரர் மதுரையைச் சேர்ந்தவர் என்பதால் அவரது ஊரில் அவர் செலவு செய்து திருமணம் செய்தார். 5.9.2019 அன்று திருமண வரவேற்பு நடைபெற்றது என்றாலும், அந்த வரவேற்வு விழாவிற்கு அனைத்து செலவுகளையும் மனுதாரர்தான் செய்தார் என்றால் சரிதான். மேற்படி திருமணத்திற்கு நாங்கள் மதுரை வருவதற்கு மனுதாரரால் பேருந்து வசதி செய்து தரப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் ரயில் மூலம் மதுரை சென்றோம். திருமணத்திற்காக மனுதாரர் குடும்பத்தினரால் பட்டுப் புடவை மற்றும் 5 சவரன் நகைகள் எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் 3 சவரன் நகைகள்தான் போட்டார்கள். 3 சவரன் சரடு போட்டார்கள். அரை சவரனில் திருமாங்கல்யம் செய்து போட்டார்கள் என்றால் சரிதான். அரை சவரன் மோதிரம் போட்டார்கள் என்றால் இல்லை. திருமணத்தின்பொழுது என் சகோதரருக்கு மாம்பிள்ளைத் தோழன் என்ற முறையில் மனுதாரரால் ஒரு சவரன் சங்கிலி அணிவிக்கப்பட்டது என்றால் சரிதான்.

2) திருமணத்தின் பொழுது எங்கள் வீட்டில் இருசக்கர வாகனம் வாங்கி கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதனை தற்பொழுது என் சகோதரர் பயன்படுத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர்தான் பயன்படுத்தி வருகிறார். திருமணத்திற்கு பிறகு நானும், மனுதாரரும் சோத்துப்பாக்கம்

கிராமத்தில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். அதன் பிறகு அனகாபுத்தூரில் குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் மனுதாரர் ஒரு குடிகாரர் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு அவர் குடிகாரர் என்பதற்கு மருத்துவ ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதன் விவரத்தை என்னுடைய எதிருரையில் சொல்லியுள்ளேன். நான்தான் மனுதாரருடன் அடிக்கடி சண்டை போட்டு மன உளைச்சல் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

3) நான் மனுதாரருடன் சண்டை போட்டு எத்தனை முறை என் தாய் வீடடிற்கு சென்றுள்ளேன் என்றால் நான் சண்டை போடவில்லை, மனுதாரர்தான் சண்டை போட்டு என்னை அனுப்பி வைப்பார். நான் சண்டை போட்டுக் கொண்டு எப்பொழுதும் அவ்வாறு சென்றதில்லை. மனுதாரருடன் நான் சண்டைபோடுவது என் பெற்றோருக்கு தெரியாது என்றால் மனுதாரர் என்னுடன் சண்டை போடுவதை என் பெற்றோரிடம் கூறியுள்ளேன். நான் சண்டை போட்டுக் கொண்டு என் பபெற்றோர் வீட்டிற்கு சென்றபொழுது, என் பெற்றோர் எத்தனை முறை அறிவுரை கூறி அனுப்பிவைப்பார்கள் என்றால் நான் சண்டை போட மாட்டேன், ஆனால் பல முறை என்னை என் பெற்றோர் அறிவுரை கூறி அனுப்பி வைப்பார்கள். என்னுடைய எதிருரையில் மனுதாரர் எவ்விதத்திலும் சந்தேகப்பட்டார் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை சந்தேகப்படுத்தி கொடுமைப்படுத்தினார் என்ற விவரத்தை என்னுடைய எதிருரையில் குறிப்பிட்டுள்ளேன்.

4) முதல் விசாரணையில் மனுதாரர் என்னையும், என் குடும்பத்தாரையும் அசிங்கமான வார்த்தகைளால் திட்டி கொடுமைபடுத்தினார் என்ற விவரத்தை என்னுடைய எதிருரையில் சொல்லியுள்ளேன். அவ்வாறு மனுதாரர் என்னை அசிங்கமாகத் திட்டி கொடுமைப்படுத்தியாதாக கூறுவதற்கு காவல்துறை மூலம்

நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. 6.05.2022 அன்று நான் மனுதாரரை விட்டு பிரிந்து சென்றேன் என்றால் சரிதான். நான் எம்.ஏ., பி.எட் படித்துள்ளேன். அலைப்பேசி வைத்து பயன்படுத்தி வருகிறேன். 2022 ற்கு பிறகு மனுதாரருடன் சேர்ந்து வாழ நான் தனிப்பட்ட முயற்சி செய்தேனா என்றால் நானும், செய்தேன், என் பெற்றோர்களும் செய்தார்கள். நான் எத்தனை முறை அலைப்பேசியில் அழைத்துள்ளேன் என்றால் பலமுறை அழைத்துள்ளேன். ஆனால், அவர் அலைப்பேசியை எடுக்கமாட்டார். 06.05.2022–க்குப் பிறகு நான் எப்பொழுது அவரை தொடர்பு கொண்டேன் என்றால் அன்றைய தினமே தொடர்பு கொண்டு பேசினேன். எங்களுடை இல்லற வாழ்க்யையில் குழந்தைகள் ஏதும். இல்லை என்று சொன்னால் சரிதான். எங்களுடைய திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான்.

4) மனுதாரரை துன்புருத்தி, அவருடன் சண்டைபோட்டு நான் அவருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் அடிக்கடி மனுதாரருடன் கோபித்துக் கொண்டு தாம்பத்திய வாழ்க்கையில் அவருடன் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாய் வீட்டில் நான் உள்ளவரை மனுதாரருடன் தாம்பத்திய உறவில் நான் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து விவரங்களும் பொய் என்றால் சரியல்ல. எதிருரையில் சொல்லாத விவரங்களை என்னுடைய முதல் விசாரயணையில் சொல்லியுள்ளதால், என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் மனுதாரர் தன் மனுவில் கோரியுள்ளவாறு விவாகரத்து பரிகாரம் வழங்க எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.